**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் வெற்றிடமாகவுள்ள முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு அனுவதித்தல் (secondment) அடிப்படையில் முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தர் சேவையிலுள்ள முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்**

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் வெற்றிடமாகவுள்ள முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக அரசாங்கத்தின் தேவையின்படி அனுவதித்தல் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இணைந்த சேவையின் முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தர் சேவையிலுள்ள முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. சுயவிபரம் (CV), அரசாங்க சேவையில் சேவை உறுதிப்படுத்தல் கடிதம், உரிய தொழில்சார் தகைமை ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் நிறுவனத் தலைவரின் பரிந்துரை ஆகியவற்றுடன் சேர்த்து தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு இணைந்த சேவையில் தற்போது சேவையாற்றிவரும் ஆர்வமுள்ள முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தர்களிடம் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன் 2025.03.10 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கப்பெற வேண்டும்.

03. தகவல்களை அனுப்பும் போது குறிப்பாக பின்வரும் விபரங்களைத் தயவுகூர்ந்து கவனத்திற்கொள்க.

i. பெயர், தே.அ.அ. இலக்கம், செயற்பாட்டிலுள்ள தொலைபேசி இலக்கம் ஆகியவை சுயவிபரத்தில் (CV) தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

ii. இந்தப் பதவிக்கு, முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III/II/I இல் எம்என் 2 – 2016 இன் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

iii. PDF வடிவ மாதிரியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் careers@trc.gov.lk இற்கு மின்னஞ்சலில் அனுப்பப்பட வேண்டும். நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை உங்களின் மின்னஞ்சலின் விடயக் கோட்டில் குறிப்பிடுவதை தயவுசெய்து உறுதிப்படுத்துக.

iv. 0112-2689345 எனும் தொலைபேசி இலக்கத்திற்கூடாக மேலதிக தகவல்களைக் கோர முடியும்.

பணிப்பாளர் நாயகம்,

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,